இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித்துளிகள் அமைதி காத்தனர்)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 1, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு நிதி அமைச்சர்.

1—

சத்தியமூர்த்தி நெசவாளர் காலனியில் புதிய வாக்குச்சாவடி அமைத்தல்

20400–டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, அண்டக்குடி வாக்குச்சாவடியில் சத்தியமூர்த்தி நெசவாளர் காலனி, பர்மா காலனி (பொன்னையாபுரம் அருகில்), பாம்புவிழுந்தான் ஆகிய பகுதிகளைப் பிரித்து தனியாகப் புதிய வாக்குச்சாவடி சத்தியமூர்த்தி நெசவாளர் காலனியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம் மாவட்டம், 200 பரமக்குடி (தனி) சட்டமன்றத் தொகுதியில் தற்போதுள்ள 47 ஆம் எண்ணுள்ள வாக்குச்சாவடி, 66 (எல்லா வாக்காளர்களும்) மற்றும் 67 (எல்லா வாக்காளர்களும்) என இரு வாக்குச்சாவடிகளாகப் பிரிக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள வண்ணமே 67 (எல்லா வாக்களர்களும்) எண்ணுள்ள வாக்குச்சாவடி சத்தியமூர்த்தி காலனியில் அமைந்துள்ள செளராஷ்டிரா துவக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ளது.

1995 மார்ச் 15]

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளின் குறிப்பு அறிந்து செயல்படுகின்ற தாயைப் போல, இன்றையதினம் தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கேட்ட மாத்திரத்திலேயே, என்னுடைய தொகுதியில், ஒன்றியப் பகுதியில் ஒரு வாக்குச் சாவடி அமைத்துக் கொடுத்தமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பரமக்குடி ஒன்றியப் பகுதியில், நகராட்சியின் அருகில் உள்ள பகுதிகளில் வாக்குச் சாவடிகளை அமைக்கின்றபோது, அந்த ஒன்றியப் பகுதியில் பள்ளிகள் அல்லது அரசு அலுவலகங்கள் இல்லாத சூழ்நிலையை அறிந்து, நகராட்சியினுடைய பள்ளிகளை வேண்டி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு ஒரு பரிந்துரை வந்துள்ளது. அங்கேயும் புதிய வாக்குச் சாவடிகள் அமைக்க மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 47-வது வாக்குச் சாவடியைப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்ததன் அடிப்படையிலேதான், 66, 67 என்று இரண்டு வாக்குச்சாவடிகளாக அது பிரிக்கப்பட்டு, ஒன்றிய ஆரம்பப் பள்ளி, குளரிப்பட்டியில் ஒரு வாக்குச்சாவடி-இதில் தெற்கு அண்டக்குடி பஞ்சாயத்து பிளாக் 1-இல் அடங்கிய தெற்கு அண்டக்குடி, குளரிப்பட்டி ஆகிய பகுதிகள் அதோடு சேரும். (67 எல்லா வாக்காளர்களுக்கும்) சௌராஷ்டிரா ஆரம்பப் பள்ளி, சத்தியமூர்த்தி காலனியில் அமைக்கப்படுகிறது. தெற்கு அண்டக்குடி பஞ்சாயத்து பிளாக் (2)-இல் அடங்கிய பாம்புவிழுந்தான், சத்தியமூர்த்தி காலனி, பர்மா காலனி, ராம் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அங்கே வாக்களிக்க வசதி ஏற்படுகிறது. ஆகவே ஒரு வாக்குச்சாவடி புதிதாக ஏற்படுத்த வேண்டுமென்றால் அந்தப் பகுதியினுடைய நிலைமைகள், அந்த வாக்குச்சாவடிக்குத் தேவையான அளவிற்கு வாக்காளர்களுடைய எண்ணிக்கை ஆகியவைகளைப் பார்த்து, தக்கதொரு இடத்தில் மையப் பகுதியிலே கூடுமான வரையில் அமைப்பதுதான் முறையாக இருக்கும். அந்த வகையிலே, கோரிக்கை வருகின்றபோது ஆராயப்படும்.